பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 09 உ ஞாயிற்றுக்கிழமை (23-6-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 200

# தற்கொலைப்படை தாக்குதல் தொடரலாம் என்று அச்சம்!

## இந்தியத் தூதரக வீதி போக்குவரத்துக்குத் தடை!

கொழும்பு, ஜூன் 23

கொழும்பில் இந்தியத் தூதரகம் அமைந்துள்ள — இந்திய இல்லம் இருக்கும் — வீதி போக்குவரத்துக்கு பாவிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு இராணுவத் தலைமையகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பு நகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தாக்குதல் நடந்த இடத்தில் இருந்து சற்றுத் தொலைவில் இருந்த இந்தியத் தூதரக அதிகாரிகளின் வீடுகளும் சேதமடைந்தன என்றும் — அவ்வதிகாரிகளும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## ஆனையிறவில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஆனையிறவு, இயக்கச்சிப் பகுதிகளில் நேற்றுக்காலை 10 மணியளவில் விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

அவ்ரோ விமானத்திலிருந்து 6 குண்டுகள் வீசப்பட்டன; அச்சமயம் இரு பொம்மர்கள், இரு ஹெலிகள் அப்பகுதியை வட்டமிட்ட வண்ணம் இருந்தன.

இதனைத் தொடர்ந்து நண்பகல் முதல் முகாமிலிருந்து இயக்கச்சிப்பகுதியை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஷெல் மற்றும் விமானக் குண்டுகள் வெளியான இடங்களில் விழுந்து வெடித்ததால் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-15)

## இறந்ததாகக் கருதப்பட்ட வயோதிபர் உயிருடன் மீட்பு!

### சரவணையில் சம்பவம்

புளியங்கூடல், ஜூன் 23

சரவணை சின்னமடுவில் இராணுவ நடவடிக்கையில் சிக்கி உயிரிழந்ததாகக் கருதப்படும் ஒருவர், அவரது மரணச் சடங்குகள் முடிவடைந்த பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார்!

அவருடன் சேர்ந்து மற்றொரு வயோதிபரும் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கணபதி முருகேசு (வயது54) அவரது சகோதரரான வயோதிபர் ஆறுமுகம் ஆகியோரே சின்னமடுப் பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளினால் கடந்த வியாழனன்று மீட்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் சின்னமடுப் பகுதிக்கு முன்னேறியபோது இராணுவ நடவடிக்கைகளில் அகப்பட்டு கணபதி முருகேசு உயிரிழந்ததாக முன்னர் கருதப்பட்டது. உறவினர்களினால் அவருக்காக மரணச் சடங்கும் நடத்தப்பட்டது.

இராணுவ நடவடிக்கைக்கு உள்ளானபகுதியிலிருந்துமேற்படி இரு நபர்களும் மீட்கப்பட்ட சமயம் மிகவும் உடல் மெலிந்து பலவீனமான நிலையில் காணப்பட்டனா. (உ-125)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் ரெலோ, படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரும், ரெலோவினரும் சேர்ந்து தேடுதல் நடவடிக்கைகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த வியாழக் கிழமை காலை 9 மணியளவில் மண்டூர், சின்னவத்தை, 14 ஆம் கொலனி முகாம்களிலிருந்து வெளியேறிய படையினர் நெடியகாவெட்டை பகுதியையும்—

அன்று காலை 10 மணியளவில் களுவாஞ்சிக்குடி முகாம் படையினரும், ரெலோவினரும் இணைந்து எருவில், குருமண்வெளி, [illegible]மூர் ஆகிய கிராமங்களையும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பை பலப்படுத்துவதில் அரசு தீவிரம்

கொழும்பு, ஜூன் 23

கொழும்பில் தற்கொலைப் படைத் தாக்குதல் தொடரலாம் என அரசாங்கம் அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் பாதுகாப்பு அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கேந்திர முக்கியத்துவம் உள்ள இடங்களில் ஆயுதம் தாங்கிய படையினரும், பொலீஸாரும் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்காகக் கூடும் எனக் கருதப்படும் கட்டடங்கள் உள்ள பகுதிகள் மக்கள் நடமாட்டத்துக்குத் தடை. செய்யப்பட்டுள்ளன.

தொலைக்காட்சி, வானொலி நிலையங்களுக்குச் செல்லும் பதைகளும் மூடப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் இராணுவ

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புதிய முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

திருகோணமலை மாவட்டம் மகிந்தபுரத்தில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் ஒன்று கடந்த 15 ஆம் திகதி புதிதாக அமைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (உ - 3)

## தோப்பூரில் இரு தமிழர்கள் படுகொலை

யாழ்ப்பாணம், ஜூன் 23

திருகோணமலை மாவட்டம் தோப்பூர் முகாம் படையினர் கடந்த வியாழனன்று மீன்பிடித்துக் கொண்டிருந்த இரு தமிழர்களைச் சுட்டு கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது, (உ - 3)

## பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 23

தொண்டமானாறு சடல் பிராந்தியத்திலிருந்து நேற்றுக் காலை கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (இ - 15)

## முச்சந்தி முரளி



அப்ப ...... கொழும்பிலை ... தொடங்கியாச்சு என்டு சொல்லுங்கோ ......!

## ஐ.நா. அகதிகள் தூதரக திட்டங்கள் நிறுத்தப்படுமா?

ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் செயற்திட்டங்களை இலங்கையில் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்பது குறித்து ஜெனிவாவில் உள்ள தலைமையகம் விரைவில் முடிவு செய்யும். இது சம்பந்தமாக இப்போது அங்கு பரிசீலனை செய்யப்படுகிறது.

இலங்கையில் இந்த அமைப்பு நடைமுறைப்படுத்திய செயற் திட்டங்களை இந்தமாத இறுதியுடன் நிறுத்த ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டிருந்தது.

நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்துவதா? அல்லது நிறுத்துவதா? — என்பது குறித்துத் தீர்மானிக்கும் பொருட்டு ஜெனிவாவில் இப்போது பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. டபிள்யூ. டி. கிளாரன்ஸ் பிராந்திய அலுவலகங்களின் பொறுப்பாளர்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டு ஜெனிவா சென்றுள்ளார். (அ-3)

## முகாம்களிலுள்ள அகதிகள் அரை வருடம் பட்டினி!

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகி 53 வாரங்கள் முடிந்துவிட்டன. ஆனால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு ஆகக்கூடியது 27 வாரங்கள் மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது அவர்கள் அரை வருடத்துக்கு பட்டினி கிடக்க வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது என்று கொள்ள வேண்டியுள்ளது.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்காமல் உறவினர்களுடன் தங்கி இருப்போருக்கு 15 வாரங்களுக்கும், இடம்பெயர்ந்து தொழில் இழந்தவர்களுக்கு 13 வாரங்களுக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மீன்பிடிப்படகு மீது கடற்படை தாக்கு!

### மூவர் பற்றித் தகவல் இல்லை

குருநகா, ஜூன் 23

குருநகரில் இருந்து கடற்தொழிலுக்குச் சென்ற இயந்திரப்படகு ஒன்று ஸ்ரீலங்கா கடற்படையின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு பாலைதீவுக்கு அப்பால் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது, ஒருவர் நீந்திக் கரை சேர்ந்துள்ளார். மூவரின் நிலை தெரியவில்லை.

குருநகர் பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த பண்டா என்பவரே தப்பி வந்தவர் ஆவார்.

குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த மத்தியாஸ் பிரேலிஸ்[சின்னவன்] மற்றும் ராஜன், மண்டைதீவைச் சேர்ந்த பபி ஆகியேரே இன்னும் கரை திரும்பாதவர்கள் ஆவார். (இ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் கல்வி நிவாரணம் - 1992

ஸ்ரீ லங்கா இராணுவத்தின் நடவடிக்கையால் (1990 — 1991) பாதிக்கப்பட்ட 6 வயது தொடக்கம் 18 வயதுடைய பிள்ளைகளுக்கு இக் கல்வி நிவாரணம் வழங்கப்படும். பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை அவற்றை அண்டிய பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

தகைமை :

1. தாய், தகப்பன் இருவரையும் இழந்த பிள்ளைகள் (இவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.)
2. தகப்பனை இழந்த பிள்ளைகள்.

விண்ணப்பங்களை முழு விவரங்களுடனும் 31-7-91க்கு முன்னர் சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.

ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(சி/136)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம்: 14 ... 06 ... 1966

மறைவு: 21 ... 12 ... 1990

### ஆனந்தசுந்தரம் பாலச்சந்திரன்

ஆனந்தசுந்தரம் சீதாலெட்சுமி தம்பதியினரின் அருந்தவப் புதல்வரான இவர் 21 - 12 - 1990 இல் ஜேர்மனியில் காலமானார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் ஜேர்மனியில் அவரது இல்லத்தில் 15 - 06 - 1991 இல் நடைபெற்றன.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

அப்பா - சங்கரப்பிள்ளை ஆனந்தசுந்தரம்
அம்மா - மயில்வாகனம் சீதாலெட்சுமி,
அண்ணா - ரவிச்சந்திரன்,
தங்கை - காமினி,
தம்பி - சசிதரன், கிரிதரன்,
அக்கா - வசந்தி,
அத்தான் - செ. ஜீவரட்ணம் (17313)

## மரண அறிவித்தல்கள்

### திரு. V. கனகசபாபதி
[இளைப்பாறிய P. W. D. ஓவசியர்]

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய P.W.D. ஓவசியர் திரு. V. கனகசபாபதி 18 - 06 - 1991 இல் கொழும்பில் காலமானார். இவர் காலஞ் சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், சணேசலிங்கம், திருமதி சாந்தாதேவி [பிலிப்பின்ஸ்], கணராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு.S. செல்வரட்ணம், [A. D. B. பிலிப்பின்ஸ்], திருமதி ஸ்ரீ பத்மினி, ரதிமலர் ஆகியோரின் அன்பு மாமனும், சுமதி சுதன், குகன், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20 - 06 - 1991 இல் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
கணராஜா.
[17311]

### சங். சகோதரி லொயலா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான சகோதரி லொயலா 22 - 06 - 91 அன்று இறைபதமடைந்தார். நல்லடக்கம் 23-06-91 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் நடைபெறும். அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவோம்.

மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம்.

மாகாணத் தலைவி
(17115)

# ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச சிறிசேன கூரேயின் மைத்துனர்

கொழும்பு, ஜூன் 23

இந்தியாவில் தலைமறைவாகி உள்ளதாக கருதப்படும் ஜே. வி. பி. யின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க, ஜனாதிபதி பிரேமதாசவுக்கு மிக நெருங்கியவரான அமைச்சர் சிறிசேன கூரேயின் மைத்துனர் என்று கூறப்படுகிறது.

அண்மையில் இந்த இயக்கத்தின் எஞ்சியுள்ள தலைவர்கள் சிலர் ஓர் இரகசிய இடத்தில் கூடி, புதிய அரசியல் விவகாரக் குழு ஒன்றை அமைத்துள்ளனர். அத்துடன் ஜே. வி. பி. கிளர்ச்சி ஆரம்பித்து 20 ஆண்டுகள் நிறைவு பெறுவதையும் அவர்கள் கொண்டாடினர்.

இதே வேளை அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபை தேர்தல்களின் போது தெற்கில் அரசியல் படுகொலைகளும், காணமற் போவோர் தொகையும் அதிகரித்துக் காணப்பட்டதாகவும் மனித உரிமைகள் சங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நியூயோர்க்கில் நடைபெற்ற மனித உரிமை அரசின் மனித உரிமைகள் மீறல் பற்றி மிகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசின் சார்பில் கலந்து கொண்ட சட்டமாகள் மாநாட்டில் சிறிலங்கா அதிபர் திரு சுனில் டி. சில்வாவிடம், அரசியல் படுகொலைகள், சித்திரவதைகள், காணாமற் போனவர்கள் பற்றி சரமாரியாகக் கேள்விகள் கேட்கப்பட்டன.

## மினி பஸ்ஸால் விழுந்து காயம்

ஓடிக் கொண்டிருந்த மினி பஸ்ஸில் இருந்து தவறிக் கீழே விழுந்தவர் தலையில் படுகாயமடைந்தார்.

சிறுப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கரவெட்டி மேற்கைச் சேர்ந்த செல்வரத்தினம் சிவகுமார் (வயது 18) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

இவர் சுயநினைவிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். (இ-15)

## வாசு கட்சி கண்டனம்

மட்டக்களப்பு — கொக்கட்டிச் சோலையில் தமிழர்களை இராணுவம் படுகொலை செய்ததற்காக அரசாங்கத்தை வாசுதேவ நாணயக்கார தலைமையிலான நவசமசமாஜக் கட்சி பலமாகக் கண்டித்துள்ளது.

இந்தியாவில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதை அடுத்து விடுதலைப் புலிகள் மீது இந்திய மக்களுக்கு ஏற்பட்டு இருக்கும் வெறுப்பையும் இந்திய அரசியலில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தையும் இலங்கை அரசு தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தி இருப்பதாகவும் நவசமசமாஜக் கட்சி அரசை வன்மையாகக் கண்டித்துள்ளது.

## A/L தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புகள்

**A/L பௌதிகவியல், தூயகணிதம், பிரயோக கணிதம்**

தனிப்பட்ட முறையில் பல ஆண்டுகளாக மேற்படி பாடங்களைக் கற்பித்து வரும் ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளோடு கற்பிக்கப்படும்.

விவரங்களுக்கு :
R. பாலா
B. Sc. (Cey.), Dip-in-Ed.
17/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(1710)

## ஆசிரியர் வங்கி ஒன்றை ஸ்தாபிப்பதற்கு முயற்சி

யாழ். மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்ப்பதற்காக ஆசிரியர் வங்கி ஒன்று உருவாக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்து, வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளைச் சேர்த்து பயிற்சி அளித்த பின்னா அவர்களது பெயர்கள் இந்த வங்கியில் பதிவு செய்யப்படும்.

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும்போது இந்த வங்கியிலிருந்து ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவார்கள்.

அவர்களுக்கு அந்தந்தப் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்களின் நிதியிலிருந்து மாதாந்த வேதனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (-3)

## வறிய மாணவருக்கு விசேட வகுப்புகள்!

### கல்வித் திணைக்களம் முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாவட்டப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் — வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ள மாணவர்களுக்கு — பாடசாலைகளிலேயே விசேட வகுப்புக்கள் நடத்தப்படவிருக்கின்றன.

இத்தகைய மாணவர்களின் விவரங்கள் பாடசாலை ரீதியாக சேகரிக்கப்படவிருக்கின்றன.

கல்வி கற்க தகுதி, ஆர்வம் இருந்தும் ரியூசனுக்கு (பிரத்தியேக வகுப்புக்கு) செல்ல வசதியில்லாத மாணவர்களுக்கே இந்த விசேட வகுப்புக்களை நடத்த கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (உ-3)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் ஆதனவரி அறிவித்தல்

1991 ஆம் ஆண்டு, 2 ஆம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 28 - 06 - 1991 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு முன்னதாக எதுவித தண்டமுமின்றி மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்வரும் விவரப்படி வெலியாத்துப்பணம் அறவிடப்படுமெனவும், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்கான வரியை அக் கந்தாயங்களின் முதல் மாதத்துக்குள் 5% வரிக்கழிவுடன் செலுத்தலாமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள், குடியிருப்புக் காணிகள் | 15% |
| இவையல்லாத காணிகளுக்கு | 20% |

காசோலைகளை, காசுக்கட்டளைகளை, அஞ்சற் கட்டளைகளை "யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின்" சார்பில் அஞ்சல் சேவையில் அனுப்பும்போது அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது வரியிறுப்பாளர்கள் ஆதனங்களின் வரி மதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் ஆகிய விவரங்களையும் தயவு செய்து இணைக்குக.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20 - 06 - 1991

[சி-0133]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### C. V. அமிர்தநாயகம்
(பிரபல கட்டடப்பட வரைஞர்)

இவரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக 24 - 6 - 91 திங்கட்கிழமை காலை 6-00 மணிக்கு யாழ். ஆசனக் கோயிலில் துக்கற் பாடற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இல. 2, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள்,
பேரப்பிள்ளைகள்.
(17308)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் பராமரிப்பு நிலையம்

சாவகச்சேரி ஜூன் 23

நுணாவில் கிழக்கு கற்குளி கந்த சுவாமி கோவில் நிர்வாகம் யாழ். கல்வித்திணைக்கள அனுசரணையுடன் பாலர் பராமரிப்பு நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சாவகச்சேரி கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் முதன்மை விருந்தினராகக்கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்துவைத்தார்.

இளைப்பாறிய சாவகச்சேரி நகரக் கொத்தணி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

[இ - 81)

# படகுச் சேவைகள்

# திடீர், திடீரென நிறுத்தம்

## தீவுப்பகுதி பயணிகள் அவலம்

நெடுந்தீவு, ஜூன் 23

முன்னறிவிப்பு எதுவுமின்றி திடீர் திடீரென தீவுப்பகுதிக்கான படகுச் சேவைகள் நிறுத்தப்படுகின்றன. இதனால் பிரயாணிகள் பெரும் அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

அவசர அலுவல்கள் நிமித்தம் யாழ். நகருக்கு வரவேண்டியவர்களும், யாழ். நகரில் இருந்து தமது அலுவல்களை முடித்துக் கொண்டு சொந்த இடங்களுக்குத் திரும்புபவர்களும், படகுகள் சேவைக்குத் திரும்பும்வரை துறைமுகங்களில் தங்கி நிற்க வேண்டியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவுகளுக்குத் திரும்பிய படகுகள் இனி எதிர் வரும் திங்கட்கிழமையே குறிகாட்டுவானுக்கு வரும் எனத் தெரிகின்றது. (இ-111)

## ஆலய விழாவில் பட்டி மண்டபம்

மயிலணி, ஜூன் 23

சுன்னாகம் ஐயனார் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவிருக்கிறது. விஷேட நிகழ்ச்சியாக அன்று இரவு கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜா தலைமையில் பட்டி மண்டபம் இடம்பெறவிருக்கிறது.

(அ-89)

## நேர்முகப் பரீட்சை

அச்சுவேலி, ஜூன் 23

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்புளோமா பயிற்சி நெறிக்கு புதிய மாணவர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

கல்விடிப்புளோமர் அனுமதி பரீட்சைக்கு 465 பட்டதாரி ஆசிரியர்கள் தோற்றினர். அவர்க்ளில் அதிக புள்ளிகளைப் பெற்ற 180 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். 170 பேர்பகுதி நேரத்திலும், 10 பேர் முழு நேரத்துக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (இ-11)

## கடல் வற்றால் படகுச் சேவை பாதிப்பு

நெடுந்தீவு, ஜூன் 23

நெடுந்தீவுத் துறைமுகத்தில் இருந்து புறப்படும் பிரயாணிகள் படகு கடல் நீர் ஏறும்வரை காத்திருந்தே பிரயாணத்தை ஆரம்பிக்கின்றனர்.

கடல் வற்றுக் காரணமாக படகு புறப்படுவதில் தாமதம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-111]

## சின்னம் சூட்டும் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். வைத்தீஸ்வர வித்யாலய சாரணர் குழு, சின்னஞ் சூட்டும் விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெற உள்ளது.

அதிபர் திரு. சி. சிவசரவணபவன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பல பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். [இ-த]

## பொம்மலாட்ட பயிற்சி கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூன் 23

கொடிகாமம் கொத்தணிப் பாடசாலை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான பொம்மலாட்டப் பயிற்சிக் கருத்தரங்கு இம்மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்
[வ - து] சுன்னாகம்.

## பதவி வெற்றிடங்கள்

மேற்படி சங்கத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வங்கிச்சேவைகள் முகாமையாளர் - குறியீடு இல. 111:07
   சம்பளத் திட்டம் —
   ரூ. 1105 - 2170
   60 x 4, 75x11

2. கிராமிய வங்கி முகாமையாளர் - குறியீடு இல. 205:11
   சம்பளத் திட்டம் —
   ரூ. 805 - 1260
   25x7, 35x8

**விண்ணப்ப முடிவு திகதி:- 15 - 07 - 1991**

மேலும் இப்பதவிகள் சம்பந்தமான தகைமை விவரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் ரூ. 5/- செலுத்தி வேலை நாட்களில் சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- பொதுமுகாமையாளர்.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
20 - 06 - 91.

[சி/0131]

English Assistant Teachers

துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 24 - 06 - 1991

9-00 மணி

Mon; Wed; Fri.
9-00 — 11-00

Lectures By KANDIAH NAVARENDRAN

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-0168]

BITSMANS

INSTITUTES MANIPAY

ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்குரிய துரித மீட்டல் ஆங்கில வகுப்புகளும், 3 மாத ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

Spoken English
With
Grammar
BY

திரு. M. A. ஹரி B A. Dip. in English

ஆரம்பம்: 24 - 06 - 91 திங்கள் காலை 9-30

[சி-0169]

# இருப்பிட வசதி தேடும் காரைநகர் மக்கள்

காரைநகர் பகுதி மக்கள் பலர் தங்க இடம் இல்லாமல் அலைந்து திரிகின்றனர்.

வழக்கம்பரை அம்மன் கோவில் மடங்களில் தங்கி இருந்த பலர் கோவில் உற்சவத்தையொட்டிவேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழகம் இலங்கை

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தில் விலங்கு வேளாண்மைத்துறைக்கு பண்ணை அமைப்பதற்குகந்த கால்நடைக்ளை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால்நடைகளை வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் அவற்றை வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் கீழ் உள்ள மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டவாறு தேவையான விவரங்களுடன் 12-07-1991 காலை 10-00 மணிக்கு முன்னர் பதிவாளர், யாழ்/பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '' க்ால்நடைக்ள் வழங்குவதற்க்ான கேள்விப்பத்திரங்கள் '' என்று குறிப்பிட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

1. **தூய ஜமுனா பாறி, சானான் மறி ஆடுகளை வழங்குதல்:-**

   யாழ்/குடா நாட்டுப் பகுதியில் இருந்து தூய இன ஜமுனா பாறி, தூய இன சானான் 08-18 மாத வயதிற்கிடைப்பட்ட மறி ஆடுகளை வழங்க விரும்புபவர்கள் வழங்க இருக்கும் ஆடுகளின் எண்ணிக்கை, இனம், ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில் வயது, உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை முதலிய விவரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

2. **தூய இன ஜமுனா பாறி, சானான் கடா ஆடுகளை வழங்குதல்:-**

   யாழ்/குடா நாட்டுப் பகுதியில் இருந்து ($1\frac{1}{2}$-$2\frac{1}{2}$) ஒன்றரை, இரண்டரை வயதிற்கு இடைப்பட்ட தூய இன ஜமுனா பாறி, சானான் இன விருத்திக்குகந்த கடா ஆடுகளை வழங்க விரும்புபவர்கள், வழங்க விரும்பும் ஆடுகளின் இனம், வயது, ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில், எண்ணிக்கை, உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை முதலிய விவரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

3. **நாட்டு இன மறி ஆடுகளை வழங்குதல்:-**

   இன விருத்திக்காக நாட்டு இனவகை ($1 - 1\frac{1}{2}$) ஒன்று ஒன்றரை வயதிற்கு இடைப்பட்ட மறி ஆடுகள் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகின்றன. கிளிநொச்சி பிரதேசத்தில் இருந்து இவ்வின மறி ஆடுகளை, வழங்க விரும்புபவர்கள் வழங்க விரும்பும் ஆடுகளின் எண்ணிக்கை, ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில் இனம், உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை விவரங்களை குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ் / பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

## மாதிரிக் கேள்விப் பத்திரம்

1. முழுப் பெயர்:-
2. முகவரி:-
   (நேரடியாக வந்து பார்வையிடக்கூடிய முறையில் முகவரியை விவரமாக குறிப்பிடவும்)
3. கால்நடைக்ள் இருக்கும் இடம்:-
   1. கிராமம்
   2. உதவி அரச அதிபர் பிரிவு
   3. மாவட்டம்
4. வழங்க விரும்பும் கால்நடைகளின் விவரமும், கோரும் விலையும்.
   1. இனம்
   2. வயது
   3. எண்ணிக்கை
   4. பர்லின் அளவு (லீற்றரில்)
   5. ஒவ்வொன்றினதும் மொத்த நிறை கிலோவில்
   6. உயிருடன் கிலோ ஒன்றிற்கு கோரும் விலை
5. மேற்குறிப்பிடப்பட்ட கால்நடைகளை கையளிக்கக் கூடிய இடம். (முகவரி)

கேள்விப் பத்திரங்கள் 12-07-91 காலை 10-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை மண்டபத்தில் திறக்கப்படும்.

[சி-0140]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 10 ஸ்ரீ தொடர்பிலக்க பஜாஜ் ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மின்சார சபை காரியாலயம், (மனோகரா சந்திக்கருகாமையில்) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (17239)

நல்ல இன அல்சேஷன் நாய்க் குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எம். எஸ். மயில்வாகனம், கிழுவான் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய், [17306]

### தேவை

தள்ளு கதிரை (Wheel Chair) உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவும் சம்பந்தன் டிஸ்பென்சரி, 574/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (17229)

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17238)

திருகுமூடி (Screw Lids) போடக் கூடிய ஜாம் (Jam) போத்தல்கள் தேவை. நியாயமான விலையில் காலை 9-00 மணிமுதல், பி. ப. 4-30 மணி வரை கிழமை நாட்களில் பின்வரும் முகவரியில் கொள்வனவு செய்யப்படும். Tasteline Industries (Pvt.) Ltd., 14 சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (17226)

வேப்பம் விதைகள் சிறு அளவாகவும், பெருமளவாகவும் தேவை. நல்ல விலைக்கு வாங்குவோம். '' மில்க்வைற் ''. [சி/0141]

மலை வேம்பு விதைகள் தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். [சி/0135]

### மணமகள் தேவை

B Sc. பொறியியலாளருக்கு 35வயது B.Sc. பெண்தேவை. 40 வயது B. Sc பொறியியலாளருக்கு பெண் சீதனத்துடன் தேவை. 49 வயது J. T. O. பொறியியலாளருக்கு ஆசிரியை பெண் தேவை. கிரசபாவம் கூடியவர்கள் தொடர்பு: ABCDE, விவாகப் பொருத்துனர் 328, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, (17232)

### மணமகன் தேவை

யாழ், இந்துப் பெற்றோர் அரசாங்க உத்தியோகம் வகிக்கும் செவ்வாய்க் குற்றமற்ற அழகிய 31 வயதுடைய பெண்ணுக்குத்தக்க மணமகனை எதிர்பார்க்கின்றனர். யாழ். நகரில் வீட்டுடன் சீதனம் வழங்கப்படும். மணமகன் கனடா செல்ல விரும்பின் செல்வதற்கு ஒழுங்குகளும் செய்யப்படும். முழு விவரங்களுடனும் தொடர்பு: இல. 322 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [17301]

### அக்கு பங்சர் சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரினால் நாரிப்பிடிப்பு, மூட்டு வாதம், தொய்வு, கபாலக் குத்து, நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. மேலதிக விவரங்களுக்கு, இல. 221/2 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்., இல. 95, யாழ். வீதி, மானிப்பாய்., திருமதி சத்தியமூர்த்தி புகையிரத நிலையவீதி, கொக்குவில். [17108]

### தவறிவிட்டது

கமலா செந்திநாதன் ஆகிய எனது அடையாள அட்டை 637820710V சிவப்பு நிறப் பேர்சுடன் முத்தமிழ் விழா கடைசி நாளன்று யாழ். முற்றவெளியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், [17309]

R. முருகதாஸ் என்ற பெயருடைய கனடா காசோலையும், 200 U. K. பவுன்ஸ் அத்துடன் Bangkok Bang கணக்குப் புத்தகமும் கச்சேரி நல்லூர் வீதிக்கும், முத்திரச் சந்திக்கும் இடையில் 20 - 6 - 91 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல-14 சங்கிலியன் வீதி, நல்லூர் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [17250]

### தவறிவிட்டன

திருமணப் பதிவுப் படங்கள் சிலவும், நெகரிவ்களும் பலாலி வீதியில் தவறிவிட்டன. மிகவும் தேவையான இவைகளை கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்திலோ அல்லது கீழ்க்காணும் விலாசத்திலோ ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். 71/3, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (17302)

### ஜோதிடம்

கருணாநிதிக்கு [இடபராசிக்கு] எல்லாக்கிரகங்களும் கோசார நிலையில் சரியில்லாததால் காங்கிரஸ் அ. தி. மு. க. கூட்டணிக்கே வெற்றிவாகை எனவும், சொந்த ஜாதக பலவீனத்தால் ஜெயலலிதாவின் முதல்வர் பதவி நீடிக்காதெனவும், முன்கூட்டியே வெளியிட்டிருந்தோம். ஜாதகங்களின் கணிப்புகள்: பேராசிரியர் சத்தியதாஸன், ஞானம்ஸ், சித்தன்கேணி, [4168]

### ரைப்றைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூடோ என்ரப்பிறைசஸ், 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [கி/0170]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரை கலந்தாலோசியுங்கள் ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக] தினசரி பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (4163)

### புலமைப் பரிசில் பரீட்சை [ஆண்டு 5]

புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய தமிழ், கணிதம் ஆகிய பாடங்களுக்குரிய ஐந்து மாதிரிப் பரீட்சைகள் 24-6-91 திங்கள் 3-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. விவரங்களுக்கு Bitsmans கல்வி நிலையம் மானிப்பாய். [4166]

### நோவு வைத்தியம்

ஓட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி, மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4156]

### ரைப்பிங் சேவை

தமிழ் [புதிய விசைப் பலகை] ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன. மற்றும் தமிழ், ஆங்கிலம், (ஸ்ரென்சில்) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். Fudo, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய். [நகர மண்டபம் முன்பாக] [சி/0165]

### வகுப்புகள்

உதவி ஆங்கில ஆசிரியருக்கான இலக்கண வகுப்புகள் 19 - 6 - 1991 இல் நடைபெற உள்ளன. By B. Manjula 21/2, அம்மன் வீதி கந்தர் மடம், யாழ்ப்பாணம். (17101)

### Personal Classes English

1992 ஆம் ஆண்டுக்கான G.C.E. A/L English Literature, G. C. E. O/L English Literature (Optional Subject) ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய பிரிவுகள் 26-6-91 ஆரம்பமாக உள்ளன. வ. கோவிந்தபிள்ளை 62, பழம் றோட், கந்தர்மடம். (17207)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 10 — 04 — 1932

இறப்பு: 23 — 06 — 1987

## திருமதி றீற்றா மகேந்திரன்

(பபா)

எம்மை அன்புடனும், பாசத்துடனும், பண்புடனும் வாழவைத்த அன்பே! உமது ஆத்மா சாந்தி அடைய இயேசு பெருமானிடம் பிரார்த்திக்கும்:

அன்புக் கணவன், பிள்ளைகள் சகோதரர்கள்,
மருமக்கள், மாமி, பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், சிநேகிதர்கள்.

40/5, கோவில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [17247]

## கலை வர்த்தகக் கல்லூரி

C. C. A.

(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)

கணக்கியல் — ஸ்ரீ

**வினா - விடை வகுப்பு**

ஆரம்பம்: 23 - 06 - 1991 ஞாயிறு

நேரம்: — 12-00 மணி

கம்பனி முடிவுக் கணக்கு புத்தகம் வெளிவந்துவிட்டது; பெற்றுக்கொள்ளலாம்.

(சி-0171)

## மூன்றாம் ஆண்டு இதய அஞ்சலி



தாயின் மடியில்: 11 - 03 - 1966

தனக்கென முடிவு: 23 - 06 - 1988

## செல்வன் பங்கிராஸ் ஏபிரகாம் லிங்கன்

(BALAN)

ஆராத அன்பால்-அருள் விழியால் - கருணையினால்
ஆரரும் போற்றும் அரும்புதல்வா ஏபிரகாம்
தீராத துன்பத் தீயிடையே எமை விடுத்து
தேவாதி தேவன் திருவடி நீ நாடினையோ?
பாலன் என அழைக்கப் பாரிலினி யாவர்? - திருப்
பாலன் அழைப்பேற்றுப் போயினையே!
போயினையே!
மூனும் எரியினிலோர் மெழுகானோம் — ஏசுபிரான்
வாழும் உலகினில் நீ வாழ்ந்திடுக! வாழ்ந்திடுக!

உனது ஆத்மா உய்திபெற அஞ்சலித்து நிற்கும்;
அம்மா, அக்கா, அண்ணன்மார், அண்ணி;
உற்றார், உறவினர், நண்பர்கள்.

'' மலர் பவனம் ''
தெல்லிப்பழை. (4164)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 29 - 12 - 1927

உதிர்வு: 04 - 07 - 1990

திதி: 23 - 06 - 1991

அமரர்

## செல்லையா சிவஞானசம்பந்தன்

(சரவணையூர் சோதிடர், இளைப்பாறிய அதிபர்)

அன்பின் உருவமாய், பாசத்தின் பிறப்பிடமாய், கண்ணை இமை காப்பது போல் எம்மை எல்லாம் காத்தீரே! திடீரென காலன் உங்களை அழைத்தானே ஓராண்டு சென்றாலும் உங்கள் பொன்னான நினைவுகள் எங்களை விட்டு பிரியாது துடிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

V. H. லேன்,
கோப்பாய் தெற்கு,
இருபாலை. [17209]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புரிவது என்ன?

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

கொழும்பில் இதற்கு முன்னரும் பல தடவைகள் குண்டுத் தாக்குதல்கள் நடந்திருக்கின்றன.

ஆகப் பிந்திக் கடைசியாகக் கடந்த மார்ச் மாதம் இரண்டாம் திகதி அமைச்சர் ரஞ்சனைக்கொன்ற குண்டு வெடிப்புச் சம்பவமும் கொழும்பை — தென்னிலங்கையை — பதற்றமுற வைத்தது.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினர் தமது பணியில் எவ்வளவு ''திறமைசாலிகள்'' என்பதையே முந்திய குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக் காட்டின. வெள்ளிக்கிழமைத் தாக்குதலோ...? பாதுகாப்பு அமைச்சின் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தையே தாக்குதலில் இருந்து காப்பாற்ற முடியாத பாதுகாப்புப் படையினரால் மக்களை எப்படிக் காப்பாற்ற முடியும்? — என்ற கேள்வியை தென்னிலங்கை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தில் நடந்த அந்தத் தாக்குதல் சம்பந்தமான செய்திகளை, தகவல்களை அரசின் பொதுசன தொடர்பு சாதனங்கள் எவ்வாறு கையாண்டன என்பதைச் சிறிது பார்ப்போம்.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தில் நடந்த குண்டு வெடிப்பினால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள் என்பதை அழுத்தம் கொடுத்துச் சுட்டிக்காட்டும் விதத்திலேயே தொடர்பு சாதனங்கள் நடந்து கொண்டன. அவ்வாறு செய்வதன் மூலம் கொழும்பில் தமிழர்களைத் தாக்குவதற்குத் தூண்டுதல் அளிப்பது உள்நோக்கமோ என்னவோ தெரியவில்லை.

இதே அரச பொதுசன தொடர்புச் சாதனங்கள், கடந்த ஒரு வருடமாக விமானப் படையினர், தமிழ் மண் எங்கும் மிகப் பரவலாக, இடைவிடாது, ஒரே தொடர்ச்சியாக விமானத் தாக்குதல்களை நடத்தி அப்பாவித் தமிழ் மக்களை, நிராயுதபாணிகளான தமிழ் மக்களை, கோரத்தனமாகவும், கோழைத்தனமாகவும் கொன்ற போது அதனைப் பெரிதுபடுத்தினவா? அது போகட்டும் பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகின்றார்கள் என்றாவது எடுத்துக் காட்டினவா? இல்லை!

இதிலிருந்து புரிவது என்ன?

தமிழர்களை இந்த நாட்டுப் பிரசைகளாக மட்டுமல்ல, மனிதர்களாகக் கூட அரச பொதுசன தொடர்பு சாதனங்கள் கருதவில்லை. கொழும்பில் அல்லது தென்னிலங்கையில் மக்கள் பாதிக்கப்பட்டால் அதற்கு அளவுக்கு அதிகமான பிரசித்தம்; தமிழ் மண்ணில் மக்கள் பாதிக்கப்பட்டால் அதனை மூடி மறைத்துவிடுவது அல்லது குறைத்துக் காட்டுவது என்ற வாய்ப்பாட்டை அவை நிர்ணயித்துள்ளன!

இப்படியான ஒரு பின்னணியில், அரசு தமிழர்களை மனிதர்களாகவே கருதாத ஒரு பின்னணியில், அவர்களின் அரசியல் உரிமைகளை தென்னிலங்கை அரசு வழங்கும் என்றுஎப்படி எதிர் பார்ப்பது? அதனைத்தமிழர்கள்எப்படிநம்புவது? சிங்களவர்களுடன் சேர்ந்து உரிமைகளுடன் வாழ முடியும் என்று எண்ணத் தானும் முடியுமா?

# ஜனசக்தி உதவி நிறுத்தத்தால் ஏராளமான மக்கள் பாதிப்பு

## ஏற்கனவே பெற்று வந்த தர்மப் பணத்தையும் இழந்து அவதி

யாழ்ப்பாணம், ஜூன், 23

யாழ். மாவட்டத்தில் ஜனசக்தி உதவி பெற்று வந்த பலர், அது நிறுத்தப்பட்டதால் பெரும் கஷ்ட நிலையை எதிர்நோக்கி வருன்றனர்.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஜனசக்தி உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஜனசக்தி உதவி பெற்றவர்களில் பலர் ஏற்கனவே அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தர்மப் பணத்தைப் பெற்று வந்தனர்.

ஜனசக்தி உதவிகள் வழங்கப்பட்டபோது இவர்களுக்கு தர்மப் பணம் நிறுத்தப்பட்டது.

தற்போது ஜனசக்தி உதவியும் இன்றி, தர்ம பண உதவியும் இன்றி இவர்கள் அங்கலாய்க்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-5]

## முல்லை. மாவட்டத்துக்கு நான்கு உ. அ. அதிபர்கள்

புதுக்குடியிருப்பு, ஜூன் 23

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தி அடைந்த நால்வர் உதவி அரசாங்க அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு உ. அ. அ. பிரிவுக்கு திரு. சி,ஏ. மோகன்றாசும், புதுக்குடியிருப்பு உ. அ. அ, பிரிவுக்கு திரு. சீ. தயானந்தாவும், துணுக்காய் உ, அ. அ. பிரிவுக்கு திரு. எஸ். ராமச்சந்திரனும், மாந்தை கிழக்கு உ. அ. அ. பிரிவுக்கு திரு. எஸ். கிருபாகரனும் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-த-126)

## கொக்குவில் - கோண்டாவில் பகுதிகளில் திருட்டு அதிகரிப்பு

கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் திருட்டு சம்பவங்கள் பெருமளவில் அதிகரித்து வருகின்றன.

கடந்த வாரத்தில் மட்டும் மூன்று பலசரக்குக் கடைகள் உடைக்கப்பட்டு 35 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கொக்குவில் கிழக்கில் உள்ள கடை ஒன்றிலிருந்து 16,500 ரூபா பெறுமதியான மிளகாய், மல்லி, பிஸ்கட் போன்றவையும், கோண்டாவில் பகுதியிலிருந்து 17,500 ரூபா பெறுமதியான அரிசி, மண்எண்ணெய் போன்ற பொருள்களும் திருடப்பட்டுள்ளன. (இ-த-15)

## அகதி குடும்பத்திடம் திருட்டு

தென்மராட்சி, ஜூன் 23

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து பளை வண்ணான்கேணி தேவாலய முகாமில் தங்கியிருந்த அகதிக் குடும்பம் ஒன்றிடமிருந்து ரூபா 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெறுமதியான நகைக்ள், பணம், விலை உயர்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது. (இ-117)

## சீர்கேடு

கொடிகாமம், ஜூன் 23

எழுதுமட்டுவாள் ஆயுர்வேத வைத்தியசாலை உரிய முறையில் திருத்தம் செய்யப்படாததால் மழை பெய்யும் போது மருந்து வகைகள் சேதம் அடையும் அபாயம் இருந்து வருகிறது. (இ-75)

## மகாஜனாவில் நிறுவுனர் நாள்

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி நிறுவுனர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விழாவில் கல்லூரியின் பழைய மாணவரான வைத்திய கலாநிதி க. சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## குரக்கன் செய்கைக்கு ஊக்குவிப்பு

அச்சுவேலி, ஜூன் 23

குரக்கன் பயிர்ச் செய்கைக்கு விசேஷ ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

தற்பொழுது குரக்கன் பயிர்ச்செய்கைக்கு ஏற்றகாலமாகக் காணப்படுவதால் விவசாயிகளை பெரும் அளவில் குரக்கன் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தும் நோக்கத்துடனேயே ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

மகளிர் ஐக்கிய நாணய சங்கங்கள், உலர் உணவு உற்பத்தி அபிவிருத்தி அமைப்புகள் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்படும். (இ-11)

## விவசாயக் கடனை திருப்பி செலுத்தத் தேவை இல்லை

அச்சுவேலி, ஜூன் 23

கெயர் ஸ்தாபனத்திடமிருந்து கடன் அடிப்படையில் பெற்ற விவசாய உற்பத்திப் பொருள்களுக்கான பணத்தை விவசாயிகள் திருப்பிச் செலுத்தத் தேவை இல்லை.

யு. எஸ். எயிட் உதவியுடன் அகில உலக கெயர் ஸ்தாபனம் உணவு உற்பத்திக்கு கடன் அடிப்படையில் மண்எண்ணெய், பசளை, தானியவகை என்பனவற்றை விவசாயிகளுக்கு வழங்கியிருந்தது.

மகளிர் ஐக்கிய நாணய சங்கம், உலர் உணவு உற்பத்திச் சங்கம் ஆகியவற்றின் ஊடாக பொருள்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன.

இந்தப் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் மொத்தப் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு மாதாந்தம் தவணைமுறையில் பணம் அறவிடப்பட்டு வந்தது.

தற்பொழுது கடன் திட்டம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே மாதாந்தம் அறவிட்ட கட்டுப்பணத்தை விவசாயிகளின் பெயரில் சேமிப்புக்கணக்கில் வைப்புச் செய்யுமாறு அகில உலக கெயர் ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (இ-11)

## மேசைப் பந்துப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டத்தில் மேசைப் பந்தாட்டப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் ஆண்கள், பெண்களுக்கான ஒற்றையர் இரட்டையர் ஆட்டங்கள் ஆண் — பெண் இரட்டையர் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. [இ-த]

## ஆய்வரங்கு

குருநகர், ஜூன் 23

யாழ் திருமறைக் கலாமன்ற இலக்கிய அவை ஆய்வரங்கு இன்று ஞாயிறு மாலை யாழ். பிரதான வீதியில் உள்ள மன்றத்தில் நடைபெற இருக்கிறது. (இ-51)

# ஆங்கில ஆசிரியர்களுக்கு முல்லைத்தீவில் பற்றாக்குறை

புதுக்குடியிருப்பு, ஜூன் 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் புள்ளி விவரங்களுடன் இதனைத் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 146 ஆங்கில ஆசிரியர்களின் இடங்களிற்கு தற்போது 37 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். எஞ்சிய 109 இடங்களும் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன.

அண்மையில் வெளியான தேசிய வர்த்தமானியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் [illegible] குறைந்தளவான வெற்றிடங்களே இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கு ஆட்சேபனை தெரிவித்தே முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் புள்ளி விவரங்களுடன் மேலிடத்துக்கு அறிவித்துள்ளார். (இ-த-126)

# இந்தியச் செய்திகள்

## புதிய முதல்வர்கள்

சென்னை, ஜூன் 23

கேரள முதலமைச்சராக கே. கருணாகரன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். அவர் நாளை பதவியேற்பார்.

அண்மையில் நடந்த தேர்தலில் வெற்றிபெற்ற இந்திரா காங்கிரஸ் எம். எல்.ஏக்களின் கூட்டம் நேற்று திருவனந்தபுரத்தில் நடந்தபோது அவர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அஸாமில் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த சைத்தியாவும் —

உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த கல்யாண்சிங்கும் —

ஹரியானாவில் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பஜன்லாலும்—

புதிய சட்டசபைகளில் தமது கட்சியின் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவர்கள் மூவரும் விரைவில் தத்தமது மாநில முதல்வர்களாகப் பதவியேற்பார்கள். (உ)

## ஜோதிபாசு 4 ஆம் தடவை முதலமைச்சர்

கல்கத்தா, ஜூன் 23

மேற்கு வங்காள முதலமைச்சராக திரு. ஜோதிபாசு நான்காவது தடவையாக நாளை திங்கட்கிழமை பதவி ஏற்கிறார்.

அவரது தலைமையிலான மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி அண்மையில் நடந்த சட்டசபைத் தேர்தலில் மீண்டும் வெற்றியீட்டியது தெரிந்ததே. (இ-எ)

## நாடாளுமன்றக் குழு தலைவராக சுவாமிநாதன்

சென்னை, ஜூன் 23

அ. தி. மு. க. நாடாளுமன்றக் குழுவின் [லோக சபை) தலைவராக திரு. ஜி. சுவாமிநர்தன் தெரிவு செய்யப்பட்டார்.

வெள்ளி காலை நடந்த அ. தி. மு. க. சட்டசபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இத் தெரிவு இடம் பெற்றது. கூட்டத்தின் ஆரம்பத்தின், மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைப்பதற்கு பூரண ஆதரவளிப்பது என்று கூறும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (இ-எ)

## அமைச்சராக சரத் பவார்

மத்திய அமைச்சராக திரு. சரத்பவார் இன்னும் சில தினங்களில் பதவி ஏற்க இருக்கிறார்.

அதற்கு முன்பதாக மகராஷ்டிர முதலமைச்சர் பதவியை திரு. பவார் ராஜினாமாச் செய்ய இருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

## இடது சாரிகள் வரவேற்பு

பஞ்சாப் மாநிலத்தில் தேர்தல்களை ஒத்திவைக்கும் பிரதம தேர்தல் ஆணையாளரின் முடிவை இட்துசாரி கம்யூனிஸ்ட் கட்சிகள் வரவேற்றுள்ளன.

ஆனால், பஞ்சாப் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் என்று பதவி விலகும் பிரதமர் சந்திரசேகர் எச்சரித்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டில் புலிகளுக்கு எதிராக தீவிரமான நடவடிக்கை எடுப்பாராம்!

## செல்வி ஜெயலலிதா தூரதர்ஷனுக்குப் பேட்டி

சென்னை, ஜூன் 23

''தமிழகத்தில் விடுதலைப் புலிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களை இங்கிருந்து அகற்றுவதற்கான சகல நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்படும்.

மிகப் பெருமளவில் இங்கு ஊடுருவி, பரவிப் படர்ந்து நிலை கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளை எப்படிச் சமாளிப்பீர்கள்? வெளியேற்றுவீர்கள்? என்று சிலர்சந்தேகத்துடன் கேட்கிறார்கள்.

திறமையான காவல் துறையினரும், நிர்வாக இயந்திரமும் இருக்கும்போது அது முடியாத காரியமல்ல. மக்களும் இது விடயத்தில் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு''

தமிழகத்தின் புதிய முதலமைச்சராக நாளை பதவி ஏற்கவிருக்கும் செல்வி ஜெயலலிதா தூரதர்ஷனுக்கு அளித்த விசேட பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

ஈழத் தமிழர் விவகாரம் குறித்து செல்வி ஜெயலலிதா கூறியதாவது.;—

புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஈழப் போராளிகளுக்கு பேராதரவு நல்கினார்; அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்தார்; உத்தியோக ரீதியிலும், தனிப்பட்ட ரீதியிலும் மிகப் பெருமளவில் உதவினார்; மத்திய அரசின் மூலமாகவும் பல உதவிகளைச் செய்து கொடுத்தார்; அதற்காக இலங்கை அரசு எம். ஜி. ஆரை எதிர்த்தது.

ஆனால் பதவியில் இருந்த தி.மு.க. அரசும், திரு. கருணாநிதியும் ஈழப் போராளிகளுக்கு உதவவில்லை; அவர்களது இயக்கங்களுக்கும் உதவவில்லை; பதிலாக தமது சுயலாபத்துக்காக அவர்களைத் தவறான வழியில் இட்டுச் சென்றார்கள்.

அதனாலேயே தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு மிக மோசமான அளவுக்குப் பாதிக்கப்பட்டது.

ஈழப் போராளிகள் இந்த நாட்டின் சட்டங்களை மீறி நடக்கவோ, அத்துமீறல் செய்யவோ, அமைதியைக் குழப்பவோ நாம் இடம் கொடுக்க மாட்டோம். அது தீவிரவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் பலமடைய செய்யும். அதனை அனுமதிப்பது தமிழ் நாட்டுக்கும் நல்லதல்ல; இந்தியாவுக்கும் நல்லதல்ல,

ஆகையால் ஈழப் போராளிகள் சட்டத்தையும் ஒழுங்கையும் குலைத்து அத்துமீறுவதை கட்டுப்படுத்துவது எங்கள் அரசின் முக்கிய பணியாக இருக்கும்.

இந்த மண்ணின் சட்டத்தை மீறும் அத்தனை பேரையும் இங்கிருந்து வெளியேற்றுவோம். அது விடயத்தில் எமது நடவடிக்கை மிகவும் கடுமையாகவே இருக்கும்.

அனுமதியின்றி யார் ஆயுதம் வைத்திருந்தாலும் அவர்கள் மீது சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். இது தமிழக பிரசைகளுக்கும் பொருந்தும்.

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர் போராளிகள் குழுக்கள் எல்லாமே பிரச்சினை தருகின்றன என்று சொல்வதற்கில்லை. சில குழுக்கள் அமைதியாக இயங்குகின்றன. அவற்றின் மீது நாம் நடவடிக்கை எடுக்கமாட்டோம்.

ஈழப் போராளிகள் குழுக்கள் சட்டம் அமைதியைக் குலைக்காமல் இருக்கும் வரை அவை மீது நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது.

ஆனால் விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில் எங்கள் அரசின் நடவடிக்கை கடுமையாக இருக்கும்; இருந்தே தீரும். மாநில அரசு அவர்களுக்கு ஊக்கம் கொடுத்ததால் அவர்களை அடக்க முடியாமற் போயிற்று. நாம் இனி தக்கபடி நடவடிக்கை எடுத்தோமானால் அடக்கி விடுவோம். என்ற நம்பிக்கை எனக்குண்டு.

நாம் ஈழத் தமிழர்களில் அகதிகளுக்கு ஒரு விதமாகவும், போராளிகளுக்கு வேறு விதமாகவும் அணுகுமுறைகளைக் கடைப்பிடிப்போம்,

அகதிகளை தாயுள்ளத்துடன் நோக்கி, சருணை காட்டி அவர்களின் மறுவாழ்வுக்கு எல்லாவித உதவிகளை செய்வோம்.

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு நேர்மையான முறையில் தீர்வு காணப்படவேண்டும். இது விடயமாக மத்திய அரசுடன் பேசுவோம். தமிழர்களுக்கு ஆதரவாக நடந்து கொள்ளுமாறும் அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கத் தக்க நடவடிக்கை எடுக்குமாறும் வற்புறுத்துவோம். இதனை நாம் இன உணர்வுடன் மாத்திரமன்றி மனித நேயத்துடனும் செய்வோம்.— இவ்வாறு செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

## நாளை வெளிவரும்

யாழ்ப்பாணம், ஜூன் 23

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரப் பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் 'குரல் 23' நாளை வெளிவரும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

★ தமிழர் தேசியம் பிரகடனம் — தலைவர் பிரபாவின் அறைகூவல்.

★ இன்னொரு உலக அதிசயம் — கரும்புலிகள்.

★ 'ராஜீவ் காந்தி மரணம்; ஏன் இந்தக் குற்றச் சாட்டு?' — ஆசிரிய தலையங்கம்.

★ ஒரு வருடப் போர் — ஆய்வு.

★ 'இரண்டு தசாப்தங்களும்—புலிகளும்' — கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் கட்டுரை.

— ஆகியவை உட்பட பல முக்கிய கட்டுரைகள் இந்த இதழில் இடம்பெறுகின்றன. (உ)

★ 13 முகாம்கள் தகர்ப்பு ★ 2,745 ஆயுதங்கள் மீட்பு

# ஒரு வருட யுத்தத்தில் 3,000 படையினர் பலி

## 1,306 விடுதலை வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

கடந்த ஒரு வருடமாக நடந்து வரும் போரில் விடுதலைப் புலிகள் 13 இராணுவ முகாம்களையும் 22 பொலீஸ் நிலையங்களையும் தகர்த்தெறிந்திருக்கிறார்கள்.

1990 ஜூன் 10 முதல் 1991 ஜூன் 10 வரையான காலத்தில் ஆயிரத்து 853 நவீன ஆயுதங்கள் உட்பட 2 ஆயிரத்து 745 ஆயுதங்களையும் லட்சக் கணக்கான ரவைகளையும், பெருமளவு இராணுவ சாதனங்களையும், வெடிப் பொருள்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

குண்டுவீச்சுவிமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

3ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஸ்ரீலங்காப் படையினர் உயிரிழந்தனர்,

விடுதலைப் புலிகள் தரப்பில் ஆயிரத்து 306 வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

ஒரு வருடப் போரில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| பவள் கவச வாகனம் | — | 01 |
| 50 கலிபர் துப்பாக்கி | — | 01 |
| ரி 56 துப்பாக்கிகள் | — | 81 |
| ரி 56 - 1 துப்பாக்கிகள் | — | 132 |
| ரி 56 - 2 ,, | — | 260 |
| ரி 81 ,, | — | 147 |
| எஸ் 84 ,, | — | 366 |
| எஸ். ஏ. ஆர். துப்பாக்கிகள் | — | 53 |
| எஸ். எல். ஆர். ,, | — | 454 |
| எஸ். எம். ஜி. ,, | — | 32 |
| ஜி 3 ,, | — | 09 |
| ஜி 3 சினைப்பர் ,, | — | 02 |
| எவ். என். சி. ,, | — | 53 |
| கோல்ட் கொமாண்டோ | — | 03 |
| 303 ரகத் துப்பாக்கிகள் | — | 377 |
| கைத் துப்பாக்கிகள் | — | 26 |
| வேட்டைத் துப்பாக்கிகள் | — | 355 |
| ரிப்பீற்றர் ,, | — | 122 |
| காஸ் கண் | — | 12 |
| மினி மினி எல். எம். ஜி. | — | 11 |
| உல்ரிமகஸ் ,, | — | 07 |
| ஜி. பி. எம். ஜி. | — | 06 |
| 303 எல். எம். ஜி. | — | 11 |
| ஏ. கே. ,, | — | 60 |
| ரி 81 ,, | — | 03 |
| ஜி. 3 ,, | — | 01 |
| எம். ஜி. - 3 | — | 01 |
| எல் 3, எல். எம். ஜி. | — | 02 |
| 2 அங்குல மோட்டர் | — | 08 |
| 60 மி. மி. மோட்டர் | — | 39 |
| 81 மி. மி. மோட்டர் | — | 06 |
| 40 மி. மி. கிறனேட் பிஸ்டல் | — | 20 |
| ஆர். பி. ஜி. | — | 33 |

# கருணாநிதி இராஜினாமா!

## தோல்விக்குப் பொறுப்பேற்றார்

சென்னை, ஜூன் 23

தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் பதவியில் இருந்து தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று ராஜினாமாச் செய்து விட்டார்.

இது தொடர்பாக திரு. கருணாநிதி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

நடந்து முடிந்த சட்டசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தி.மு. க. தோல்வி அடைந்ததற்கான முழுப்பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொள்வதா திரு. கருணாநிதி தமது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

அனுதாப நிலையாலும் வீண் பழியாலும்தான் உண்மையான பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, தமது கட்சி பெருந் தோல்வியைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டதாகவும் கருணாநிதி தெரிவித்து இருக்கிறார்.

தமிழகத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி. மு. க. ஒரு நாடாளுமன்றத் தொகுதியிலும் வெற்றியீட்டவில்லை. சட்டசபைத்தேர்தலில் சென்னை துறைமுகம் தொகுதியில் இருந்து திரு மு. கருணாநிதி மட்டும் வெற்றியீட்டினார் என்பது தெரிந்ததே. (உ-எ)

## மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

பாக்கியராசா (வயது 20) என்ற தமிழ் இளைஞன் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டான்.

இதேவேளை பெரிய போரதீவுப்பகுதியில் முகாமிட்டுள்ள படையினரும் ரெலோவினரும் இணைந்து விவசாயிகளை தலா 500 ரூபா தருமாறு கேட்டு நிர்ப்பந்திக்கிறார்கள் என்றும்—

இதனால் அந்த விவசாயிகள் அப்பகுதிகளிலிருந்து வெளியேறிவருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை போரதீவு, கல்லடிப்பற்று, வெளிப்பற்று ஆகிய பகுதி விவசாயிகள் இவ்வாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். (உ-3)

## தற்கொலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியத்துவம் உள்ள நிலையங்களைத் தொடர்ந்து வைத்திருக்க முடியுமா என்ற கேள்வி அரசதரப்பில் எழுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தர்க்குதலுக்கு இலக்காகவிருக்கும் கட்டடங்களின் விவரங்கள் அடங்கியதாகக் கூறப்படும் ஒரு பட்டியல் தங்களுக்கு கிடைத்துள்ளதாக புலலாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

இந்தப் பட்டியலில், ஜனாதிபதியின் வாசஸ்தலமும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாம். [உ-எ]

## முகாம்களி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கும் மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. 1500 ரூபாவுக்கு மேல் மாத வருமானம் பெறுவோருக்கு ஆறு வாரங்கள் மட்டுமே இலவச நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் சம்பந்தமான கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

யாழ், மாவட்டத்தில் 56,642 குடும்பங்கள் இடம்பெயர்ந்த போதிலும் 7 ஆயிரத்து 900 குடும்பங்களை மட்டுமே முகாம்களில் தங்க வசதிசெய்ய முடிந்தது. புதிய முகாம்களை அமைக்க இடவசதி இல்லாததால் அவர்களை உறவினர்களுடன் தங்குமாறு கேட்கப்பட்டது.

— என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. (அ - 3)

# பட்டினி, நோய் அபாயம் குறித்தே இனி அறிக்கை

## செயலகக் கூட்டத்தில் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அரசாங்கம் அனுப்பும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் போதாது என்று எத்தனை தடவைகள் எடுத்துக் காட்டியும் பயன் இல்லை.

எனவே இனிமேல் உணவு, மருந்து வகைகளுக்குப் பற்றாக்குறை என்று அறிக்கைகள் அனுப்புவதைத் தவிர்க்க வேண்டும்.

போதியளவில் அவை கிடைக்காததால் உருவாக இருக்கும் பட்டினி நிலை, நோயால் மரணம் என்பன குறித்தே அரசுக்கு அறிவிக்க வேண்டும்,

இவ்வாறு யாழ்- செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் புதிய ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. அத்தியாவசிய சேவைகள் குறித்து ஆராய்வதற்காக இக்கூட்டம் நடைபெற்றது. (அ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-06-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org